# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2009 ஆகஸ்ட் திங்கள் 28.08.2009–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

முன்னிலை. திரு.ஜே.ஜேசையா அவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்.

**பொருள் எண் : 1**

**27.07.2009–ம் தேதிய சாதாராணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

சொர்ண ஜெயந்தி திட்டம் 2008–2009–ம் ஆண்டிற்கு பயிற்சி பிரிவிற்கு வரப்பெற்ற தொகை ரூ.47,000/– மட்டும். இத்தொகையை செலவிடும் நடவடிக்கையாக கணினி பயிற்சி அளிப்பதற்கு (M.S.Office) கீழ்க்கண்ட 3 நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பயிற்சி மையத்தின் பெயர் | நபர் 1–வருக்கு | பயிற்சி காலம் |
|---|---|---|---|
| 1 | சன் கம்பியூட்டர் கல்வி நிலையம், குளச்சல் | ரூ. 100/– | 1 மாதம் |
| 2 | பிட்ஸ் கம்பியூட்டர் கல்வி நிலையம், குளச்சல் | ரூ. 900/– | 3 மாதம் |
| 3 | யுனிக்யூ கம்பியூட்டர் கல்வி நிலையம், குளச்சல் | ரூ. 1250/– | 3 மாதம் |

மேற்கண்ட மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.6536/08/எச்2)

**தீர்மானம் எண்.961: M.S.Office-ல் தரமான கல்வி சொல்லித்தருவதற்கு நபர் ஒன்றுக்கு மாதம் 100 என்ற நிரக்கில் இயலாத காரியம் என்று மன்றம் கருதுகிறது. எனவே சன் கம்யூட்டர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை நிராகரித்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. Bits- நிறுவனம் மாதம் 300 ரூ. நிரக்கில் பயிற்றுவிக்க விலைப்புள்ளி கொடுத்துள்ளது. யுனிக் கம்பியூட்டர் கல்வி நிறுவனமும் மாதம் ரூ.300 நிரக்கில் பயிற்றுவிக்க சம்மதம் கடிதம் கொடுத்துள்ளது. எனவே M.S.Office Course-னை பயிற்றுவிக்க Bits-நிறுவனத்துக்கும், Unique நிறுவனத்திற்கும் வேலையுத்தரவு வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. எஸ். ராபின் சுந்தர்சிங் | கணனி புள்ளி விபர குறிப்பாளர் | 6/2009 | 2468/– |
| 2 | திருமதி.எஸ், சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 5/2009<br>6/2009<br>7/2009 | 329/–<br>906/–<br>900/– |
| 3 | திருமதி. அ. நிர்மலா ஜாய் | இளநிலை உதவியாளர் | 6/2009<br>7/2009 | 300/–<br>600/– |

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.962: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் 01.07.2009 முதல் 31.07.2009 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட தலைப்பிலான செலவின சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(1.) பொது நிதி செலவு சீட்டுகள்:**

**06/2009**

275, 276, 277, 278, 279, 280, 281, 282, 283, 284, 285, 286, 287, 288, 289, 290, 291, 292, 293, 294, 295, 295, 296, 297, 298, 299, 300, 301, 302, 306, 307, 308, 309, 310, 311, 312, 313, 314, 315, 319, 320, 323, 324, 325, 326, 327, 328, 329, 330, 331, 332, 333, 334, 335, 336, 337, 338, 339, 340, 341, 342, 349, 350, 356, 357, 358, 359, 360, 361, 362, 363, 364, 365, 366, 367, 368, 369, 370, 371, 372, 373, 374, 375, 379, 380, 381, 382, 383, 384, 385, 386

**(2.) குடிநீர் திட்ட நிதி செலவு சீட்டுகள்:**

**07/2009**

36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52,

**(3.) SFC: O and M Gap Filling Fund:-**

**07/2009**

303, 304, 305, 316, 317, 318, 343, 344, 345, 346, 347, 348, 351, 352, 353, 376, 377, 378

**(4) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப்பணி செலவு சீட்டுக்கள்:**

**07/2009**

354, 355

**(5) 12–வது நிதிக்குழுத் திட்டப்பணி செலவு சீட்டுக்கள்:**

**07/2009**

**321**

**(6) IDSMT திட்டப்பணி செலவு சீட்டுக்கள்:**

**07/2009**

**322**

அ.குறிப்பு: : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.963: பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது அலுவலகம் வழியாக 15 தினக்கூலி பணியாளர்கள் 20.12.2005 முதல் 15.09.2007 முடிய அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி காலத்திற்கான ஊதியத் தொகையும் வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரால் அளித்த உத்தரவின்பேரில் இப்பணியிடங்களை தொடர வேண்டிய அவசியம் இருப்பின் அதற்கான செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இப்பணியாளர்களின் சேவை இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியிலும், இந்நகரின் தூய்மைக்கும் அத்தியாவசிய இன்றியமையாத தேவையாக இருப்பதால் இப்பணியிடங்களை 28.08.2009 வரை நீட்டிப்பு செய்து ஊதியம் வழங்க மன்றம் தனது தீர்மானம் எண். 867 நாள் 29.05.2009 –ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நிலையில் மேற்காணும் பணியிடங்களை தொடர்ந்து நீட்டித்தால் தணிக்கைத் தடை எழக்கூடும். மேலும் நிர்வாக சிக்கலும் எழக்கூடும். மேலும் நகராட்சியின் பொது நிதியும் போதிய திருப்திகரமானதாக இல்லை. எனவே 28.08.2009–க்கு பின் இப்பணியிடங்களை தொடாந்து நீட்டிக்க இயலாது என்பதால் 28.08.2009 வுடன் இப்பணியிடங்களை முடிக்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.964: சுனாமியினால் பாதிப்படைந்துள்ள பகுதிகளின் இடிபாடுகள் இன்னும் மாற்றப்படாத சூழ்நிலையில், சுகாதாரக் கேட்டினை அப்பகுதிகளில் தவிர்க்கும் பொருட்டு, இப்பணியிடங்களை 27.11.09 வரை நீட்டிப்பு செய்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

நகர் பகுதியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு வீடு கட்டுவதற்கு நீண்டகால கடன் உதவி திட்டம் அரசால் அரசாணை எண். 66 நாள் 15.05.2009 மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் EWS (Economically weaken Sessions) பிரிவில் மாத வருமானம் ரூ.3600/– ம் LIG பிரிவில் மாத வருமானம் ரூ.3301/– முதல் ரூ. 7300/– வரையிலும் உள்ள நிலம் வைத்திருக்கும் மற்றும் வீடு வாங்க உள்ளவர்களுக்கு ரூ.1,00,000/– மற்றும் ரூ.1,60,000/– தொகையினை 15 முதல் 20 வருடங்களில் கட்டி முடிக்கக்கூடிய வகையில் 5% வருடாந்திர வட்டியில் வழங்குவதற்கும் அதனை அமுல்படுத்துவதற்கு T.N.H.B. யினை Nodal அலுவலராக நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி நகராட்சி பகுதியில் உள்ள பயனாளிகளை தேர்வு செய்வதற்கு அரசாணையானது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அரசாணையினை பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.965: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி, கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால், 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ''**எங்கள் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குழந்தை தொழிலாளர்கள் எவரையும் பணிக்கு அமர்த்தப்படவில்லை**'' என்று மன்றக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதன் விவரத்தினை தெரிவிக்க, தொழிலாளர் ஆய்வாளர், நாகர்கோவில் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேற்கண்ட விவரம் மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பரிசீலிக்கலாம்.

**தீர்மானம் எண்.966: தொழிலாளர் ஆய்வாளர், நாகர்கோவில் அவர்களிடம் முழு விபரம் கேட்பதற்காக ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

நகராட்சியால் பயன்படுத்தி வந்த கொசு தடுப்பு நடவடிக்கைக்கான புகை மருந்து அடிக்கும் மிஷின் (Machine) புகை வராமல் அடிக்கடி பழுதான நிலையில் இருப்பதாலும், புதிதாக இரண்டு புகை மருந்து அடிக்கும் Pulse Fog Machine 4 லிட்டர் அளவு கொண்ட மெஷின் 2 எண்ணம் வாங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். எச்1/3702/09 )

**தீர்மானம் எண்.967: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

நகராட்சி குப்பை வண்டி TN.74.Z.8931 மற்றும் T.N.74.T.5508 ஆகிய வண்டிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வீடுகள்தோறும் குப்பைகள் வாங்குவதற்கும். வெண்கல மணி 2–ம், சுத்தியல் 2–ம் வாங்குவதற்கும் மன்ற;த்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.968: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைலர் காமராசர் பேருந்து நிலையம் அருகில் உள்ள காலி இடத்தில் மினி லாரி வாகனம் நிறுத்துவதற்காக (டெம்போ வாகனம்) ஷெட் அமைக்கும் பணி முடிவுற்று உள்ளது. அவ்விடத்தை குத்தகை விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : (1) மன்றம் அனுமதிக்கலாம்.

(2) நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏலத்தில் விட நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

(3) டெபாசிட் ரூ. 5,000/– நிர்ணயம் செய்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.அ2/3479/09)

**தீர்மானம் எண்.969: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 10</u>**

**குளச்சல் நகர்மன்றத்தின் 17–வது வார்டு உறுப்பினர் திரு.சி.முருகன் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மக்களும், வெளியூர் மக்களும் பயன்பெறும் வகையில் பெரிய அளவில் அரசு மருத்துவமனை உள்ளது. அதில் பிரசவத்திற்கு செல்லும் ஏழை தாய்மார்களை அங்குள்ள மருத்துவர் மற்றும் ஊழியர்கள் இங்கு போதுமான மருத்துவர்களும், மயக்க மருந்து நிபுணர்களும் இல்லை. எனவே நீங்கள் ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்று அனுப்பி விடுகிறார்கள். ஆனால் அங்கு சென்றாலோ குளச்சலிலிருந்து அனுப்பி விடுகிறவர்களை நாங்கள் உடனே கவனிக்க வேண்டுமா என்று திட்டி தீர்க்கின்றார்கள். எனவே வளர்ந்து வரும் குளச்சல் நகரில் அமைந்துள்ள அரசு மருத்துவனையில் நிரந்தரமாக ஒரு மயக்க மருந்து நிபுணரும், சர்ஜரி நிபுணரும் அமர்த்தி ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்பட நமது நகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி சம்மந்தப்பட்ட துறைகளுக்கும், அமைச்சருக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் அனுப்பி ந.டவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.970: ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

**குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2009 ஆகஸ்ட் திங்கள் 28.08.2009–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது**

**தலைவர்**
**குளச்சல் நகராட்சி மன்றம்**

**முன்னிலை. திரு.ஜே.ஜேசையா அவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்.**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் மேலாளர் திரு. T.கிருஷ்ணமூர்த்தி என்பவர் அலுவலக பணியின் நிமித்தம் வெளியூர் சென்று வந்தமைக்கான பயணப் பட்டியல்கள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | மாதம் | தொகை |
|---|---|---|
| 1 | ஜுன் 2009 | 643/– |
| 2 | ஜுலை 2009 | 738/– |
| 3 | ஆகஸ்ட் 2009 | 738/– |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண்.971: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

அ) இந்நகராட்சிக்கு தேவையான சொத்துவரி குறைப்பு மனு தொடர்பான அறிவிப்பு, வரிமேல் முறையீடு தொடர்பான அறிவிப்பு, சொத்துவரி குறைப்பு பதிவேடு, சொத்துவரி மேல்முறையீடு பதிவேடு ஆகியவைகள் உடனடியாக உள்ளூர் அச்சகத்தில் இருந்து அச்சடிப்பதற்கும் அதற்காகும் செலவுத் தொகை ரூ. 4300/–க்கும் நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

ஆ) மேற்காணும் படிவங்கள் உடனடியாக தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி கீழ்க்காணும் உள்ளூர் நிறுவனங்களில் இருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | தாசன் ஆப்செட், குளச்சல் | 4300/– |
| 2 | தங்கம் பிரிண்டிங் சென்டர், குளச்சல் | 4550/– |

**அ.குறிப்பு :** (1) மேற்காணும் படிவங்கள் அச்சடிப்பதற்கு செலவுத் தொகை ரூ. 4300/– மன்றம் அனுமதிக்கலாம்.
(2) தாசன் பிரிண்டிங் பிரஸ், குளச்சல் நிறுவனத்தாரின் விலைப்புள்ளித் தொகை ரூ.4300/– குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தாருக்கு உத்தரவு வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.972: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஜேம்ஸ் மருத்துவமனை நிறுவனம் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ஒற்றைக்கண் பாலம் முதல் சிங்கன்காவு சந்திப்பு வரையில் மழைநீர் வடிகால் ஓடை அமைப்பதற்கு ஒப்பந்தப்புளளி கோரியதை 15.08.2009 அன்று தினத்தந்தி நாளிதழில் வெளியிட்ட வகையில் தினத்தந்தி நாளிதழுக்கு ரூ. 2223/– செலுத்த கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 2305/09/இ1)
**தீர்மானம் எண்.973: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 4</u>**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் IDSMT திட்டத்தின்கீழ் 2004–05–ல் செலவிடப்படாமல் உள்ள தொகைக்கு பணிகள் தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மாலை மலர் நாளிதழில் 11.07.2009 அன்று விளம்பரம் செய்த வகையில் மாலை மலர் நாளிதழுக்கு ரூ.1056/– செலுத்தக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மாலை மலர் நாளிதழுக்கு மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2035/09/இ1அ2

**தீர்மானம் எண்.974: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 5</u>**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளுக்கு தற்போது ஆழ்துளை கிணறுகளில் 10 H.P. திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் மற்றும் 5 HP நீர்மூழ்கி மோட்டார்கள் மூலம் பம்பிங் செய்யப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் பாலத்தன்கரை சம்பில் 12. 5 HP திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார்கள் 2 எண்ணம் உள்ளன. மேற்கண்ட அனைத்து மோட்டார்களும் தினமும் சுமார் 22 மணி நேரத்திற்கும் மேல் இயங்குவதால் அடிக்கடி பழுதாகி வருகின்றன. தற்போது இயங்கும் மோட்டார்களில் பல 5 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவை. அவைகள் பலமுறை பழுதுகள் ஏற்பட்டு சரி செய்யப்பட்டவை. ஆகவே அவைகளை மாற்றி விட்டு அதே திறன் ன்காண்ட புதிய Texmo நீர்மூழ்கி மோட்டார்கள் 4 எண்ணம், 5 HP நீர்மூழ்கி மோட்டார் 1 எண்ணம் மற்றும் 12. 5 HP நீர்மூழ்கி மோட்டார் 1 எண்ணம் வாங்கி ஆழ்துளை கிணறுகளில் மாட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,00,000/– க்கும் மேற்கண்ட மோட்டார்களை வாங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.975: 10 HP 4 எண்ணம், 12 HP 1 எண்ணம், மற்றும் 5 HP 1 எண்ணம், ஆகிய 6 Texmo நீர்மூழ்கி மோட்டார்கள் வாங்குவதற்கு கூறப்பட்டுள்ள அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 1–வது மற்றும் 2–வது வார்டுகளுக்குட்பட்ட பவுண்டரி ரோட்டில் வி.கே.பி. பள்ளிக்கூடம் அருகில் இருந்து நடுக்கள்ளியடைப்பு வரையில் 110mm விட்டமுள்ள பகிர்மான குழாயும் அங்கிருந்து வடக்கு கள்ளியடைப்பு பிரியும் இடம் வரையிலும் 90 mm விட்டமுள்ள பகிர்மான குழாய் அமைப்பதற்கு ரூ.2,70,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 19.08.2009–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 4.52% மதிப்பீட்டை விட அதிகம் ( ரூ. 2,52,695/– ) |
| 2 | திரு.எஸ். டேவிட் ராஜ் | 9.74% மதிப்பீட்டை விட அதிகம் |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 31.07.2009–ம் தேதிய 960–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3.) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். இதில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 4. 52% மதிப்பீட்டை விட அதிகமாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3484/09/இ1)

**தீர்மானம் எண்.976: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகிலுள்ள Bore Well No.5–ல் உள்ள மோட்டார் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட பழுதினை சரி செய்வதற்கு ரூ.10,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 12.08.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 9983/–) |
| 2 | திரு.பி. தங்கமணி | 5.67 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 10550/–) |

**அ.குறிப்பு:** (1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.
(2) . மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 27.07.2009–ம் தேதிய 914–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
( 3.) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3452/09/அ2)

**தீர்மானம் எண்.977: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பொருட்டு, மாதாகாலனி நீர்தேக்க தொட்டியில் இருந்து சொசைட்டி இருக்கும் துறைமுகத்தெரு பகுதிக்கும், துறைமுகத்தெருவில் உள்ள நீர்தேக்கத் தொட்டி மூலம் துறைமுகத்தெரு 3–ம் நம்பர் பகுதிக்கும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு, துறைமுகத்தெருவில் கதவு எண். 17/56 –ன் முன்னால் 4” Sluice volve 2 எண்ணமும், துறைமுகத்தெருவில் மேடை முன்பு 4” Sluice valve 2 எண்ணமும், 3’’ Gate valve 1 எண்ணமும் அமைப்பதற்கு ரூ.51,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 18.08.2009 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 2.54% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 49626.40) |
| 2 | திரு.பி. தங்கமணி | 11.31% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 56680/– |

**அ.குறிப்பு:** (1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.
(2) . மேற்காணும் வேலையின் அவசரம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
( 3) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 2.54% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3483/09/அ2)

**தீர்மானம் எண்.978: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ராபின் மருத்துவமனை தெருவில் A.C.Pumping line உடைப்பு ஏற்பட்டு அதை சரி செய்வதற்கு ரூ.20,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 12.08.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 5.95% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 18,751. 05) |
| 2 | திரு.பி. தங்கமணி | 2.53 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 20441. 00) |

**அ.குறிப்பு**: (1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2) . மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 27.07.2009–ம் தேதிய 917–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 3.) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 5.95% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3451/09/அ2)

**தீர்மானம் எண்.979: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை Bore–யில் G.I. Pipe எடுத்துவிட்டு UPVC பைப்பாக மாற்றுவதற்கு ரூ.25,,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 18.08.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 4.43% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 21885. 00) |
| 2 | திரு.எஸ். டேவிட் ராஜ் | 0.98 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 23125. 00) |

**அ.குறிப்பு**: (1) மேற்காணும் வேலையின் அவசரம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(3) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சந்திரசேகர் என்பவர் 4.43% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3481/09/அ2)

**தீர்மானம் எண்.980: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளையில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் உள்ள மின்மோட்டார் பழுதடைந்துள்ளது. மேற்காண் பழுதினை சரி செய்வதற்கு ரூ.10,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 18.08.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. . சந்திரசேகர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 9983. 00) |
| 2 | திரு.பி. தங்கமணி | 8.17 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 10800. 00) |

**அ.குறிப்பு:** (1) மேற்காணும் வேலையின் அவசரம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.
(3) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.01% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3482/09/அ2)

**தீர்மானம் எண்.981: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட KSSS காலனியில் க.எண். 4/692–க்கு எதிராக உள்ள பொதுக்குழாயிலிருந்து க.எண். 4/681 வரை 2" விட்டமுள்ள குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.27,,000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 19.08.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 1.21% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 26083. 00) |
| 2 | திரு.எஸ். டேவிட் ராஜ் | 4.25 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 27524 .00) |

**அ.குறிப்பு:** (1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.
(2) . மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 31.07.2009–ம் தேதிய 936–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
( 3) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 1. 21% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3485/09/அ2)

**தீர்மானம் எண்.982: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 15–ம் வார்டில் துறைமுகத்தெரு 3–ல் உள்ள கழிவறை எண்.8–ல் உள்ள கழிவுநீர் செல்லும் தொட்டி உடை.ந்துள்ளதால், கழிப்பிடம் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அதனால் துர்நாற்றமும், சுகாதாரக்கேடும் ஏற்படும் என்பதால் அதனை இடித்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி கழிப்பிடமானது 1999–ம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. அப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தொண்டு நிறுவனங்கள் மூலம் தனித்தனியாக கழிப்பிடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. எனவே இது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.983: பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிப்பறையினை இடித்து ஒப்படைத்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட புனித காணிக்கை அன்னை திருத்தலம், பங்கு நிர்வாகக் குழு அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து நகராட்சி மூலமாக துறைமுகத்தெருவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள படிப்பக கட்டிடத்தின் சாவியினை கோரியுள்ளனர். மேலும் அதனை படிப்பகமாக செயல்படுத்த உள்ளதாகவும், வருங்காலங்களில் ஏற்படுகின்ற குறைபாடுகளையும் , மராமத்துப் பணிகளையும் தாங்களே செய்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.984: படிப்பகம் மட்டும்தான் செயல்படும் என்ற உத்தரவாதத்தினை பெற்றுக்கொண்டு திறவுகோலை முறையான Handed Over மற்றும் Taken Over Process னை செய்து முடித்துவிட்டு ஒப்படைத்திடவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனி சத்துணவுக்கூடம் அருகில் உள்ள Sup.line உடைவு, ஈழக்காணிவிளையில் Sup.line end cap பொருத்துவது, ஆழ்குழாய் கிணறு 3–ல் பைப் நிப்பிள் உடைவு, பர்னட்டிவிளையில் வால்வு லீக் ஏற்பட்டுள்ளது. மேற்காண் உடைவுகளை சரி செய்வதற்கு ரூ.3100/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 11.08.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 3085.25 ) |
| 2 | திரு. குமார் | 7.05 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 3304. 00) |
| 3 | திரு.எஸ். சுந்தர் | 15.25 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 3557. 00) |

**அ.குறிப்பு:** (1) மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 31.07.2009–ம் தேதிய 941–ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 2.) பெறப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.03% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3486/09/அ2)

**தீர்மானம் எண்.985: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு சாலையில் எலைட் ஹார்டுவேர்ஸ் அருகில் 4” சுவிஸ் வால்வு உடைவு, KSSS காலனியில் 2” பகிர்மான குழாய் உடைவு, சாஸ்தான்கரை அரசு போக்குவரத்து கழகம் முன்பு 3” பகிர்மான குழாய் உடைவும் ஏற்பட்டு உள்ளது. மேற்காண் உடைவுகளை சரி செய்வதற்கு ரூ.4300/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 11.08.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 4226. 90) |
| 2 | திரு. குமார் | 5.54 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 4458. 00) |
| 3 | திரு.எஸ். சுந்தர் | 12.51 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ,.4757. 00) |

**அ.குறிப்பு:** (1) மேற்காணும் வேலையின் அவசரம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

( 2.) பெறப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.03% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3480/09/அ2)

**தீர்மானம் எண்.986: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தன்கரையில் 6” மெயின் குழாய் உடைவு, மாதாகாலனி கழிவறையில் உள்ள லைன் உடைவு ஆகிய உடைவுகளை சரி செய்வதற்கு ரூ.4000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 11.08.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 3824.40) |
| 2 | திரு. குமார் | 3.14 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 4048.00) |
| 3 | திரு.எஸ். சுந்தர் | 13.81% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 44.67.00) |

**அ.குறிப்பு:** (1) மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 31.07.2009–ம் தேதிய 940 ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 2.) பெறப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் திரு.சி. சந்திர சேகர் என்பவர் 0.01% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3487/09/அ2)

**தீர்மானம் எண்.987: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் 140mm PVC லைன் உடைவை சரி செய்வதற்கு ரூ.2950/— மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 11.08.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி விலைப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 2922.00 ) |
| 2 | திரு. குமார் | 3.24 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 3017. 00) |
| 3 | திரு.எஸ். சுந்தர் | 7.19% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ, 3150. 00) |

**அ.குறிப்பு**: (1) மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 31.07.2009—ம் தேதிய 939 ம் எண் தீர்மனத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( 2.) பெறப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் திரு.சி. சந்திரசேகர் என்பவர் 0.01% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3488/09/அ2)

**தீர்மானம் எண்.988: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

குளச்சல் நகராட்சி சொர்ண ஜெயந்தி திட்டம் 2008—09 ஆம் ஆண்டிற்கு சமுதாய அமைப்பு பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.73,000/— யும் உள்கட்டமைப்பு பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.54,000/—ம் ஆக மொத்தம் ரூ.1,27,000/— வரப்பெற்றுள்ளது. மேற்காண் தொகைக்கு சுய உதவி குழுக்கள் விற்பனை செய்வதற்கான விற்பனைக்கூடம் டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தை வளாகத்தினுள் கட்டுவதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1,,30,000/—க்கும் ஒதுக்கீட்டுத் தொகை போக மீதி தொகையினை பொது நிதியில் இருந்து செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.6536/08/எச்2)

**தீர்மானம் எண்.989: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் வால்வு தொட்டிகள் இல்லாததால் தண்ணீர் திறப்பது கடினமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | மேற்கு கட்றகரை சாலை (கொட்டில்பாடு திறக்கும் வால்வு) | 2 எண்ணம் |
| 2 | மரமடி சந்திப்பு | 1 " |
| 3 | துறைமுகத்தெரு பழைய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அருகில் | 1 " |

மேற்கண்ட இடங்களில் 4 வால்வு தொட்டிகள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 45,000/— எனவே மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.990: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

குளச்சல் நகராட்சியில் ஈப்பு ஓட்டுனர் அளித்த கடிதத்தில் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN.74.V.3530–ல் கீழ்கண்ட பழுதுகளை சரி செய்து தரும்படி கோரியுள்ளார்.

1) இஞ்சின் ஆயில் மாற்றுத்ல்
2) ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்றுதல்
3) சர்வீஸ் மற்றும் கிரீஸ் அடித்தல்
4) நான்கு வீல் கிரீஸ் வைத்து, பிரேக் சரி செய்தல்
5) வீல் அலைன்மென்ட், பேலன்சிங் பார்த்தல்
6) ரேடியேட்டர் கிளீன் பண்ணுதல்
7) சஸ்பென்சன் பழுது பார்த்தல்
8) ஏர் பில்டர் மாற்றுதல்

மேற்காண் பழுதுகளை சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 17,000/– ஆகும். எனவே மேற்காண் பழுதுகளை சரி செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.991: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரையில் திரு.சிவதாணுமாலையன் என்பவரின் மனுவில் மனுதாரர் குளச்சல் நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணிபுரிந்து வந்துள்ளதாகவும், இடையில் உடல்நிலை சரி இல்லாமல் இருந்து தற்போது நல்ல உடல் நலத்துடன் இருப்பதால் தனது ஒப்பந்தக்காரர் உரிமத்தை புதுப்பித்து தருமாறு கோரியுள்ளார். மனுதார் இந்நகராட்சியில் 2007–08–ம் ஆண்டு வரை ஒப்பந்தக்காரராக பதிவினை புதுப்பித்து பணிகளை எடுத்து செய்து வந்துள்ளார். இந்நிலையில் டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தை வணிக வளாகத்தில் கேட் அமைக்கும் பணி மற்றும் துறைமுகத் தெருவில் தார்தளம் அமைக்கும் பணிகளை எடுத்து பல நினைவூட்டுகள் அனுப்பிய பிறகும் மேற்கண்ட பணிகளை செய்யாததால் நகர்மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 698 நாள் 31.10.2008–ன்படி அவரது ஒப்பந்த உரிமம் ரத்து செய்யப்பட்டு கருப்பு பட்டியவில் சேர்க்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தற்போது தனது ஒப்பந்த உரிமத்தை புதுப்பித்து தருமாறு கோரியுள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.992: 31.10.2008 நாளைய 698–ம் எண் தீர்மானத்தினை இரத்துச்செய்திடவும், அவரது உரிமத்தினை புதுப்பித்து கொடுப்பதற்கும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது..**

**பொருள் எண். 23**

கல்குளம் வட்டத்தில் உள்ள நகராட்சி பகுதிக்குட்பட்ட நியாயவிலைக் கடைகளில் காலியாக உள்ள அந்தியோதயா அன்ன யோஜனா திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை பட்டியல் குளச்சல் நகராட்சிக்கு காலியிடம் 10 எண்ணம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குளச்சல் நகராட்சி பகுதியில் வறுமைக்கோட்டு பட்டியலில் இடம் பெற்றுள்ள மிகவும் ஏழை பயனாளிகளை தேர்வு செய்து தீர்மான நகல் மற்றும் ஆணையர் ஒப்புதலுடன் அனுப்பி வைக்க, வட்ட வழங்கல் அலுவலர், கல்குளம் அவர்கள் கேட்டுள்ளார்கள். இதன் மீது மன்றத்தின் பார்வைக்கும், பயனாளிகளின் தேர்வுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பயனாளிகளை தேர்வு செய்யலாம்.

**தீர்மானம் எண்.993: கீழ் குறிப்பிட்டவாறான பயனாளிகளைத் தேர்வு செய்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

| வ. எண். | வார்டு எண் | பெயர் மற்றும் முகவரி, குடும்ப அட்டை எண் மற்றும் கடை விபரம் | வறுமைக் கோட்டு எண். | வ. எண். | வார்டு எண் | பெயர் மற்றும் முகவரி, குடும்ப அட்டை எண் மற்றும் கடை விபரம் | வறுமைக் கோட்டு எண். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | சேசையா,<br>த/பெ.பிச்சைப்பிள்ளை, க.எண்.7/106A<br>குடும்ப அட்டை எண்.30/G/0233363<br>அ.பதிவேடு எண்.313<br>ரேசன்கடை எண். CC003<br>ரேசன் கடை பெயர் KVTCMS கொட்டில்பாடு | 6/49 | 6 | 3 | முருகன்,<br>த/பெ. ராமதாஸ், க.எண். 4/50<br>குடும்ப அட்டை எண்.30/G/0496360<br>அ.பதிவேடு எண்.810<br>ரேசன்கடை எண். CC001<br>ரேசன் கடை பெயர் KVTCMS குளச்சல் டவுண். | 3/47 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 12 | சூசை ஆன்றனி<br>த/பெ. ஞானபிரகாசம். க.எண்.14/10<br>குடும்ப அட்டை எண்.30/G/0233198<br>அ.பதிவேடு எண்.390<br>ரேசன்கடை எண். CC002<br>ரேசன் கடை பெயர் KVTCMS குளச்சல் பீ;ச் | 12/92 | 7 | 2 | சுந்தரராஜன்<br>த/பெ. சிவலிங்கம், க.எண்.3/13A<br>குடும்ப அட்டை எண்.30/G/0232483<br>அ.பதிவேடு எண்.226<br>ரேசன்கடை எண். CC001<br>ரேசன் கடை பெயர் KVTCMS குளச்சல் டவுண். | 2/149 |
| 3 | 10 | சிலுவைதாசன்<br>த/பெ.அந்தோணி பிள்ளை, க.எண்.13/34<br>குடும்ப அட்டை எண்.30/G/0230741<br>அ.பதிவேடு எண்.76<br>ரேசன்கடை எண். CB001<br>ரேசன் கடை பெயர் KDCCWS குளச்சல் பீச் | 10/12 | 8 | 18 | அப்துல் ஜப்பார்<br>த/பெ. சாகுல் அமீது, க.எண்.25/3<br>குடும்ப அட்டை எண்.30/G/0231248<br>அ.பதிவேடு எண்.489<br>ரேசன்கடை எண். C002<br>ரேசன் கடை பெயர் KDCCWS குளச்சல் டவுண். | 18/21 |
| 4 | 24 | ராதாகிருஷ்ணன்<br>த/பெ.கோபாலன், க.எண். 29/118A<br>குடும்ப அட்டை எண்.30/G/0023066<br>அ.பதிவேடு எண்.0000<br>ரேசன்கடை எண். CB002<br>ரேசன் கடை பெயர் KDCCWS குளச்சல் டவுண் | 24/83 | 9 | 16 | மகேஸ்வரன்<br>த/பெ. ராஜமணி, க.எண். 24/20<br>குடும்ப அட்டை எண்.30/G/0231650<br>அ.பதிவேடு எண்.186<br>ரேசன்கடை எண். CB002<br>ரேசன் கடை பெயர் KDCCWS குளச்சல் டவுண். | 16/44 |
| 5 | 21 | முகம்மது சாலி<br>த/பெ. பீர்முகம்மது. க.எண்.30/37<br>குடும்ப அட்டை எண்.30/G/0216806<br>அ.பதிவேடு எண்.728<br>ரேசன்கடை எண். CA001<br>ரேசன் கடை பெயர் ARS குளச்சல் | 21/58 | 10 | 18 | அப்துல் ரகுமான்,<br>த/பெ. பீர்கண், க.எண். 6/36C<br>குடும்ப அட்டை எண்.30/G./0217284<br>அ.பதிவேடு எண்.322<br>ரேசன்கடை எண். CA001<br>ரேசன் கடை பெயர் ARS குளச்சல் | 4/113 |

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி